# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,858 — 1931 ம் ௵ ஆனிமீ 5 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV. நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

K 326/31.

### 1896 ம் ஆண்டின் 13 ம் இலக்க ஸ்தல யாத்திரைச் சட்டம்.

அதிகார மந்திர சபையாரின் ஆலோசனையோடு தேசாதிபதி உத்தமனுரால், கதிர்காம யாத்திரையையும் கதிர்காமத் திருவிழாவையும் நடத்தும் விஷயத்தில் விசேஷ ஒழுங்குகள் செய்யவேண்டியது ஆவசியகமாயிருப்பதினலும், 1897 ம் ஆண்டின் 7 ம் இலக்க சட்டத்தினுற் திருத்தப்பட்ட 1896 ம் ஆண்டின் 13 ம் இலக்கச் சட்டத்தின்படி செய்யப்பட்ட பின்வரும் பிரமாணங்களும் கட்டளைகளும், பல வருஷங்களாக வருஷந்தோறும் பிரசித்தப்படுத்தப்பட்ட பிரமாணங்களுக்குப் பதிலாக, யாவரு மறிந்துகொள்ளும்படி பிரசித்தப்படுத்தப்படுகின்றன.

உத்தமனுர் அவர்களின் கட்டளைப்படி,

பீ. எச் பூர்டிலன்
கலோனியல் சக்கிறுத்தார்.

கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1931 ம் ஆண்டு ஆனிமீ 2 ந் தேதி.

---

#### பிரமாணங்கள்.

1. சௌகரியாதார நோக்கமாக கதிர்காமத்தில் இசல திருவிழா நடக்கும் நாட்களும் யாத்திரிகர் கதிர்காமத்தில் தங்கக்கூடிய காலமும் 15 நாள், அதாவது 1931 ம் ஆண்டு ஆடிமீ 16 ந் தேதி தொடக்கம் 30 ந் தேதி வரைக்கும் தான், என்பதாக இதனுல் நியமிக்கப்படுகின்றது. மேற்சொன்ன தேதிக்குமுன் போய்ச்சேரும் யாத்திரிகரும் சொல்லப்பட்ட தேதிக்குப்பின் தங்கியிருக்கும் யாத்திரிகரும் ஓர் குற்றஞ்செய்தவராகக் காணப்படுவார்கள்.

2. கதிர்காமத்தில் திருவிழா நடக்கும் காலத்தில் தொற்று வியாதி உண்டுபடின் கட்டளைகளைக் கைக்கொள்ளப்பண்ணுவதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தருக்கு திருவிழாவை நிறுத்தவும், யாத்திரிகர் அந்த ஊரைவிட்டு தங்கள் வீடுகளுக்கு போகும்படி கட்டளைசெய்யவும், இன்ன பாதையாற் போகவேண்டுமென்று நியமிக்கவும் தத்துவமுண்டு.

3. நியமனம்பண்ணப்பட்டிருக்கும் தலைமைக்காரருக்கு கதிர்காமத்திலும், கதிர்காமம் போகும் பயணத்திலும், அங்கிருந்து திரும்பிச்செல்லும் பயணத்திலும் இதன்கீழ் குறிக்கப்பட்டவைகளைச் செய்ய அதிகாரமுண்டு :—

(a) யாத்திரிகளுக்கு கழுவவும், முழுகவும், தண்ணீரெடுக்கவும், தண்ணீர் குடிக்கவும் மலசலபாதைக்கு போகவும் வேறுவேறு தலங்களை நியமிக்கவும் ;
(b) அந்தந்த வகுப்பைச்சார்ந்த யாத்திரிகர் தங்கியிருக்கும்படி வெவ்வேறு தலங்களை நியமிக்கவும் ;
(c) யாத்திரிகர் கூட்டமாக இன்ன பாதையால் செல்லவேண்டுமென்று நியமிக்கவும் ;
(d) யாத்திரிகருக்கு கொடுக்கப்படும் மீன் பகிர்ந்து கொடுத்தலைப் பார்த்து நடத்தவும் ;
(e) நோய் கொள்ளும் யாத்திரிகருக்குத் தங்கியிருக்கும்படி வெவ்வேறே தலத்தை நியமிக்கவும் அவ்வாட்களுடன் வேறொருவரையும் கலவாமலிருக்கும்படி பண்ணவும், அவர்களுக்குப் பயணம் போகக்கூடாதபோனுல் நிறுத்தி வைத்திருக்கவும்.

இவ்விதம் நியமிக்கப்படிருக்கும் அதிகாரிகள் பண்ணும் கட்டளையை மீறுபவர் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவர்.

4. இந்தப் பிரமாணங்களின்பொருட்டு "யாத்திரிகர் தங்கியிருக்கும் பாடி" என்பது பெரிய கோயிலைச் சுற்றி நாலு பக்கமும் அரைமைல் தூரத்துக்குள் உள்ள பாகமெனப் பொருள்படும்.

5. பயணத்தில், அல்லது தங்கியிருக்குமிடத்தில் சுகத்துக்குப் பழுதானதென்று வைத்திய உத்தியோகஸ்தர் அல்லது அப்படியான உத்தியோகஸ்தர் இல்லாதிருந்தால், பிரதான பொலீஸ் உத்தியோகஸ்தர் காணுந் தீன் சாமானெல்லாவற்றையும் பறித்து அழித்துப்போடப் பொலீசர் தத்துவமுடையவராயிருப்பர். இந்தக் கடமையை அல்லது வேறு எந்தக் கடமையையும பொலீசர் செய்யும்போது அவ்விதஞ் செய்யவிடாமல் தடைபண்ணுபவர்கள் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவர்களாகக் காணப்படுவார்கள்.

6. மேல்விசாரணைத் தலைமைக்காரனிடமிருந்து அல்லது அவரால தத்துவம் கொடுக்கப்பட்ட உத்தியோகஸ்தரிடமிருந்து உத்தரவுச்சீட்டு பெறாமல் ஆடுமாடுகளை அல்லது வண்டிமாடுகளை தங்கியிருக்குமிடமிருந்து கால் மைலுக்குட்பட யாராகுதல் கொண்டுவந்தால் அவர்கள் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவர்களாக காணப்படுவார்கள். உத்தரவுச்சீட்டைப் பெறுவோர், தங்கியிருக்குமிடத்தில் மேல்விசாரணைத் தலைமைக்காரனுல் சனங்களின் பொதுச் சுகத்துக்காகவும் சுகாதாரத்துக்காகவும் நியமிக்கப்படும் கட்டளைப் பிரமாணங்களை அனுசரிக்கக் கடமைப்பட்டவர்களாவார்கள்.

7. எவ்வித சாமான்களையும் யாத்திரிகர் தங்கியிருக்கும் பாடியின் பொறுப்பேற்றிருக்கும் உத்தியோகஸ்தர் குறித்துவிடும் இடத்திலன்றி வேறெந்த இடத்திலும், விற்கவைத்திருக்கும் எவரும் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவர் வைத்திய உத்தியோகஸ்தர் அல்லது அவர் இல்லாதிருந்தால பிரதான பொலீஸ் உத்தியோகஸ்தர் சுகத்துக்குப் பழுதான போசனமென்று தீர்க்கும் எப்போசனத்தையும் விற்கும் எவரும் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவர்.

8. யாராயினும் கதிர்காமத்தில் தங்கியிருக்கும் காலத்தில் அரசாட்சியாரால் நியமித்திருக்கு மிடத்தைவிட வேறெந்த விடத்திலும் மலசலங்கழித்தால் அல்லது மலத்தை மண்ணினுல் மூடாவிட்டால், அல்லது தலையமைகாரர் நியமிக்கும் தலத்துக்கு மேலே ஆற்றிலிறங்க அல்லது குளிக்கச் சம்பவித்தால் அப்படிச செய்தவர்கள் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவர்களாகக் காணப்படுவார்கள்.

9 தொற்று வியாதியால் பீடிக்கப்பட்டு வைத்திய உத்தியோகஸ்தருக்கு அல்லது அவரில்லாவிட்டால் பிரதானபொலீஸ் உத்தியோகஸ்தருக்கு அது விஷயத்தை அறிவிக்கத் தவறும் எவரும் அல்லது அவ்வியாதிவந்த நோயாளியை ஒளித்துவைப்பதற்கு உதவி செய்யும் அல்லது தூண்டிவிடும் எவரும்ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராக எண்ணப்படுவர்.

10. சகல பேர்களும் பயணத்திலும் கதிர்காமத்திலும் பொலீஸ் தலைமைக்காரன் நியமிக்கு மிடத்தில் விடுதிவிட வேண்டும். அப்படிச்செய்ய மறுக்கும் அல்லாது செய்யாது விட்டுவிடும் எவரும் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராகக் கொள்ளப்படுவார்.

11. மேல்விசாரணைத் தலைமைக்காரனின் உத்தரவில்லாமல் கதிர்காமத்தில் பெரிய தெருக்களுக்குச்சேர்ந்த இடத்தைப் பிடிக்கக்கூடியதாக ஒருவரும் ஒரு கொட்டிலைக் கட்டவேனும் ஒரு கட்டடத்தைப் பெருப்பித்துக் கட்டவேனும் படாது.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பழைய பள்ளிவழிச்சந்தி வரைக்கும் தொடங்துவ தெக்காலேயில் ஸெனிடரி போட்வழி ஒன்று திறத்தலுக்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 14,283 குறிச்சி—தெகள்ளே.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | அளுத்தல்லேகவத்தை அல்லது சூரியககவத்தை | தென்னைமரங்களும் ஒரு கல் சிவரும் உள்ள தோட்டம் | ஜானிஸ் த சில்வா வீரறற்ன, கோடபெத்தை | 0 | 0 | 5 |
| 2 | சூரியககவத்தை அல்லது அம்பககவத்தை | ஒரு சூரியமரமும் ஒரு தென்னைமரமும் உள்ள தோட்டம் | ஏ. நந்திசேனே; டபிள்யு. இசோகாமி எல். எச் எல். கெந்திறிக் சில்வா, தேகள்ளே | 0 | 0 | 0·8 |
| 3 | ஷை .. | ஒரு சூரியமரம் உள்ள தோட்டம் .. | ஜானிஸ் த சில்வா வீரறற்ன, கோடபெத்தை | 0 | 0 | 0·8 |
| 4 | ஷை .. | வெறுந்தோட்டம் .. | ஏ. நந்திசேனே, தேகள்ளே .. | 0 | 0 | 0·6 |
| 5 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 0·5 |
| 6 | சூரியககவத்தை .. | ஒரு தென்னைமரம் உள்ள தோட்டம் | (1) டபிள்யு. இசோகாமி, (2) ஜீ. வீ. சுபேகாமி, (3) ஆர். கே. பபூன்காமி (4) ஆர். கே. எலேயஸ் | 0 | 0 | 0·5 |
| 7 | ஷை .. | 1 ஈரப்பிலாமரம் உள்ள தோட்டம் | ஷை .. | 0 | 0 | 1 |
| 8 | அம்பககவத்தை .. | 1 தென்னையும் 2 ஈரப்பிலாமரங்களும்உள்ள தோட்டம் | (1) டபிள்யு இசோகாமி, (2) டபிள்யு. தினேஸ் த சில்வா | 0 | 0 | 1·5 |
| 9 | புஞ்சிஅம்பககவத்தை | 2 தென்னைமரங்களும் வேறு சில மரங்களும் உள்ள தோட்டம் | (1) டபிள்யு. கரோலிஸ் சில்வா, (2) டபிள்யு. இசோகாமி, (3) டபிள்யு. ஏ. சிறிசேன, தேகள்ளே, (4) எல. எச். சௌகாமி | 0 | 0 | 1·3 |
| 10 | விந்தகுலவத்தை .. | 1 ஈரப்பிலாமரம்உள்ள தோட்டம் | (1) டபிள்யு. கரோலிஸ் சில்வா (2) டபிள்யு. ஏ. சிறிசேன | 0 | 0 | 0·3 |
| 11 | புஞ்சிஅம்பககவத்தை | 1 தென்னையும் வேறு மரங்களும் உள்ள தோட்டம் | (1) டபிள்யு. இசோகாமி, (2) டபிள்யு. ஏ. சிறிசேன (3) டபிள்யு. கரோளிஸ் சில்வா | 0 | 0 | 3·5 |
| 12 | மகாகட்டுகுறுந்துககவத்தை | 1 தென்னையும் ஓரடிப்பாதையும் கொண்ட தோட்டம | டபிள்யு. இசோகாமி (2) டபிள்யு. ஏ. சிறிசேனே, தேகள்ளே | 0 | 0 | 1·4 |
| 13 | ஷை .. | 1 தென்னை முதலியன உள்ள தோட்டம் | குருகே சந்திரதேவ, இக்கடுவ .. | 0 | 0 | 0·4 |
| 14 | ஷை .. | ஷை .. | வடுகே ஜேன் நோனா, கட்டுஹூவா | 0 | 0 | 0·2 |
| 15 | ஷை .. | வெறுக்தோட்டம் .. | ஷை .. | 0 | 0 | 0·1 |
| 16 | ஷை .. | 1 பாக்குமரம் முதலியன உள்ள தோட்டம | எஸ். கே. என்சோகாமி, தொடங்துவ | 0 | 0 | 1·4 |
| 17 | ஷை .. | 1 பிலாமரம் முதலியன உள்ள தோட்டம | ஷை .. | 0 | 0 | 3·1 |
| 18 | ஷை .. | 3 தென்னை முதலியன உள்ள தோட்டம | குருகே. சந்திரதேவ, இக்கடுவ .. | 0 | 0 | 3·8 |
| 19 | ஷை .. | 1 பிலாமரம் முதலியன உள்ள தோட்டம | டபிள்யு. தினேஸ் த சில்வா, தேகள்ளே | 0 | 0 | 1·5 |
| 20 | ஷை .. | 1 தென்னைமரம், ஒரு கல் வீடு (இடிந்த) ஒருகல்சிவர் உள்ள தோட்டம | டபிள்யு. ஒந்திரிஸ் த சில்வா .. | 0 | 0 | 3·7 |
| 21 | புஞ்சிகாட்டு குறுந்துககவத்தை | 5 தென்னைமரங்கள் முதலியன உள்ள தோட்டம | வடுகே. திேனஸ் த சில்வா .. | 0 | 0 | 5·3 |
| 22 | ஷை .. | வெறுந்தோட்டம .. | ஷை .. | 0 | 0 | 0·2 |
| 23 | ஷை .. | 3 தென்னைமரம் முதலியனவும ஓரடிப்பாதையில் ஒரு பகுதியும உள்ள தோட்டம | (1) டபிள்யு. திேனஸ்காமி, (2) எம். கே. அகோஸ்சிஞ்ஞோ | 0 | 0 | 5·5 |
| 24 | ஷை .. | 4 தென்னை மரங்களும ஓரடிப்பாதையில் ஒரு பகுதியும் உள்ள தோட்டம | எம். கே. அகோஸ்சிஞ்ஞோ, தேகள்ளே | 0 | 0 | 2·2 |
| 25 | கலகவத்தை .. | 1 தென்னை முதலியன உள்ள தோட்டம் | டபிள்யு. அகோறிஸ் த சில்வா, தேகள்ளே | 0 | 0 | 2·3 |
| 26 | புஞ்சிஅம்பககவத்த | 5 பாக்குமரம் முதலியனவும் ஓரடிப்பாதையில் ஒரு பகுதியும் உள்ள தோட்டம் | (1) எம். உபேகாமி, (2) டபிள்யு. அப்புசிஞ்ஞோர், (3) எம். ஜீ. லெளனேறிஸ், தேகள்ளே, (4) எம். டபிள்யு. பீற்றர். கோடபெததை | 0 | 0 | 3·1 |
| 27 | நாய்கந்தேவத்தேகே கொறட்டுவா | 1 தென்னை முதலியன உள்ள தோட்டம் | லெபுனகேவ சௌகாமி .. | 0 | 0 | 7·5 |
| 28 | நகரகலவத்தை .. | 1 பிலா உள்ள தோட்டம் .. | (1) டபிள்யு. அந்திரிஸ்காமி, (2) டபிள்யு. கரோலிஸ், (3) டபிள்யு. சின்ஞோபாபா, (4) டபிள்யு. இசனப்பு, தேகள்ளே | 0 | 0 | 0·5 |
| 29 | நாய்கந்தேவத்தேகே கொறட்டுவா | வெறுந்தோட்டம் .. | (1) சே. வீ. கரோகாமி, (2) டபிள்யு. பீற்றர், (3) டபிள்யு. லெந்தி, (4) டபிள்யு. சோபிநோனா | 0 | 0 | 0·1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருககிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஸ்ரீ ஜூலை மாசம் 1 ந் தேதியிலன்று காலை 9 மணிக்கு தொடங்துவ கன்சபாவ கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடக்திற கேட்டுககொள்ளப்படுகின்றது.

காலிக கச்சேரி,
1931 ம் ஸ்ரீ மேமீ 29 ந உ.

பீ. ஜெ. ஹட்சன்,
காலி அரசாட்சி இரண்டாவது ஏசண்டு.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் உந்துகொட சவக்காலைக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 4,104. குறிச்சி—மொறதன.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | அருகொனகொடவத்தை .. | வத்தை .. | ஆர். குணரெத்தினமும் மற்றவர்களும் .. .. | 0 3 15 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஷப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931ம் ௵ ஆடி மாசம் 8 ௳ தேதியிலன்று 10 மணிக்கு கேகாலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி,
1931 ம் ௵ வைகாசிமீ 27 ௳

டபிள்யு ஓ. ஸ்டீவென்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இலக்கம் 10,897, நுவரெலிய.]

### 1897 ம், 1899 ம், 1900 ம், 1903, ம் 1927 ம் ஆண்டுகளின் வெண்ணிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1931 ம் ௵ (ஜூன்) ஆனிமீ 5 ௳ தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே நுவரெலியா கச்சேரியில் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிக்கு அல்லது காணிகளுக்கு அல்லது அவைகளில் யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு 1897 ம் ஆண்டின் 1 ம் இலக்கச் சட்டத்தினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணி அல்லது காணிகள் முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. ஈ ஹொப்டே,
உதவி அரசாட்சி ஏசென்று.

குறிப்பு.—(a) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

(b) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் நுவரெலியா உதவி அரசாட்சி ஏசென்று அவர்களிடமும் அவைகளின் அளவைப்படங்கள் கொழும்பு (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

சொல்லப்பட்ட காணிகளின் விபரம்.

மத்தியமாகாணம், நுவரெலியா டிஸ்திறிக், கொத்தமல்லி பிரிவு, இஸ்பனே கோறளையைச்சார்ந்த கப்புகஸ்தலாவ என்னும் கிராமத்திலுள்ள பின்னால் சொல்லப்படும் காணித்துண்டுகள்.

பிரதமபடம் இல. 8,838.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|
| 1 | குறிகெலபத்தன (ரோட்டு சேமிப்பு நிலம்) | | 0 0 26 |
| 2 | குறிகெலபத்தன .. | .. | 1 3 21 |
| 3 | ஷை .. | .. | 0 1 11 |
| 4 | கொரொக்ககமுலடெனிய | .. | 0 2 2 |
| 5 | ஷை .. | .. | 0 1 27 |
| | | | 3 1 7 |

எல்லை: வடக்கு-முடிக்குரியதென உரித்தாடப்படும் குறிகெலபத்தன, தா. உடும லெப்பெவுக்கு கவண்மேந்து குத்தகைக்கு விடப்பட்டிருக்கும் குறிகெலபத்தன (துண்டு 120 பிரதமபடம் 7,741) முடிக்குரியதென உரித்தாடப்படும் குறிகெலபத்தன (மைக்றிக கொம்மிற்றியா ரோட்டு சேமிப்பு நிலம, துண்டு 119 பிரதமபடம 7,741); கிழக்கு-நாவலப்பிட்டியிலிருந்து கொத்தமல்லிக்குப் போகும் ரோட்டு, கொரொக்ககடெனிய எல, சம்சுடீன் அப்துல் கவ்வூருக்கு கவண்மேந்து குத்தகைக்கு விடப்பட்டிருக்கும கஹுடமட, அ. முகம்மது லெப்பெவுக்கும பிறருக்கும கவண்மேந்து குத்தகைக்கு விடப்பட்டிருக்கும கஹுடமட; தெற்கு-செய்து முகமது மௌலானவுக்கு கவண்மேந்து குத்தகைக்கு விடப்பட்டிருக்கும கஹுடமட (துண்டுகள் 14 உம் 16 உம் பிரதமபடம் 7,453); மேற்கு-இலங்கை யூனைற்றெற் பிளான்ரேஷ தோட்டக் கொம்பனியாருக்கு கவண்மேந்து குத்தகைக்கு விடப்பட்டிருக்கும் குறிகெலபத்தன (துண்டு 7 பிரதமபடம் 7,975).

---

[அறிவித்தல் இலக்கம் 10,898, குருணாகல்.]

### 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம், 1927 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் பிரகாரம் அறிவித்தல்.

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1931 ம் ௵ (ஜூன்) ஆனிமீ 5 ௳ தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் வடமேல் மாகாண ஏசன்றருக்கு குருநாக்கல் கச்சேரியில் அவர் கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனும் தங்களுக்குள்ள உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் மேற்சொல்லிய கவண்மேந்து ஏசன்றர் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம், 1927 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் பிரகாரம தமக்குள்ள அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தனது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. ஜே. எல். ரெஜேர்சன்,
வடமேல் மாகாண ஏசன்றர்.

(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் வடமேல் மாகாண ஏசண்டயிடமும் அவைகளின் அளவைப்படங்கள் நிலஅளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு—(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

மேற்கூறிய காணிகளின் விபரம்.

கீழே சொல்லப்படுங் காணித்துண்டு வடமேல் மாகாணத்தில் குருநாக்கல் டிஸ்திறிக்கில் வாயுடவ்லி கற்பத்துவில் கந்தாகே கோறளையில் டிகம்பிற்றியாக் கிராமத்தில் இருக்கின்றது.

பிரதமபடம் இல. 3,722.

| காணித் துண்டு. | காணியின் பெயர் | | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|
| 1 | கொரொசவாவ .. | .. | 7 3 31 |

எல்லை: வடக்கு-எம். திபண்டாவும் மறுவும் உருத்தாடும் மிககும்புற; கிழக்கு-முடி உருத்தாடும் கொரொசவாவ எனவும் ஆறும், எச். பி சிங்கவேத உருத்தாடும மறகெயா வெலவும்; தெற்கு-எம். எம் திபண்டாவும் மறுவும் உருததாடும் உனககொற்றுவவும, எச். அப்புகாமியும, மறுவும உருத்தாடிய கொந்தறவாலேகும்புறவும்; மேற்கு-எச். டிங்கிறி பண்டாவும், மறுவும் உருததாடும் கொந்தறவாலேகும்புறவும், பி. எம். களுபண்டாவும் மறுவும் உருத்தாடும் உடுமுல்லேவத்தவும், டிகம்பிற்றிய தேவாலயத்தின் பொறுப்பாளர்கள் உருத்தாடும் கொசத்தாவேவத்தவும்.

[அறிவித்தல் இலக்கம் 10,899, குருணக்கல்.]

**1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம, 1927 ம ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் பிரகாரம் அறிவித்தல்.**

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1931 ம் வூல (ஜூன்) ஆனிமீ 5 ந் தேதி துவக்கம் மூனறு மாசத்திற்குள் வடமேல் மாகாண ஏசன்றருக்கு குருநாக்கல் கசசேரியில் அவர் கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குளள உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் மேற்சொல்லிய கவண்மேந்து ஏசன்றர் 1897 ம். 1899 ம், 1900 ம், 1903 ம, 1927 ம ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் பிரகாரம தமக்குள்ள அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுதது மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிகதுகொள்க.

டபிள்யு ஜே. எல். ஜெரேஜர்சன்
வடமேல் மாகாண ஏசன்றர்,

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் வடமேல் மாகாண ஏசன்டரிடமும் அவைகளின் அளவைப் படங்கள் நிலஅளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென அறிந்துகொள்க.

மேற்கூறிய காணிகளின் விபரம்

கீழ் சொல்லப்படுங் காணித்துண்டு வடமேல் மாகாணத்தில் குருநாக்கல் டிஸ்திறிக்கில் வாயுடவிலி கற்பத்துவில் டாகல்பொட கோறளையில் மின்கெற்றியாக் கிராமத்தில் இருக்கிறது.

பிரதமபடம் இல. 6,647.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். வ. று. ப. |
|---|---|---|
| 1 | மகாஅமுன .. | .. 6 1 0 |

எல்லை: வடக்கு-ஆர். எம். றன்காமி உருத்தாடும் கொடஅமுனெவெல ; கிழக்கு-ஆர். எம். புஞ்சிபெனிக்காவும் மறுவும் உருத்தாடும் பகலவத்தவும், முடியும் ஆர். எம். புஞ்சிமெனிக்கவும் ஆர். எம். கிறிபண்டாவும் உருத்தாடும் பன்வலேகும்புரே எனப்படும் 6,647 ம் இலக்கப் பிரதம படத்தின் 2 ம் இலத்கத்துண்டும் ; தெற்கு-ஆர். எம். கிறிபண்டா உருத்தாடும் கொடயாயேவன ; மேற்கு-ஆர். எம். கிறிபண்டா உருத்தாடும் கொடயாயேவனவும் ஆர். எம். பண்டாவும் மறுவும் உருத்தாடும் கெபெல்லகொற்றுவேவனவும.

---

[அறிவித்தல் இலக்கம், 10,900, குருநாக்கல்.]

**1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம், 1927 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் பிரகாரம் அறிவித்தல்.**

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுங் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1931 ம் வூல (ஜூன) ஆனிமீ 5 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் வடமேல் மாகாண ஏசன்றருக்கு குருநாக்கல் கச்சேரியில அவர் கநதோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுங் தங்களுக்குள்ள உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், மேற்சொல்லிய கவண்மேந்து ஏசன்றர் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம், 1927 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் பிரகாரம் தமக்குள்ள அதிகாரத்தைககொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. ஜே. எல். ஜெரேஜர்சன்,
வடமேல் மாகாண ஏசன்றர்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் வடமேல் மாகாண ஏசன்றரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இககாணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

மேற்கூறிய காணிகளின் விபரம்.

கீழ்சொல்லப்படுங் காணித் துண்டுகள் வடமேல் மாகாணத்தில் குருநாக்கல் டிஸ்திறிக்கில் வாயுடவிலிகற்பத்துவில் மகாகலபொட மெகொட கோறளை வடக்கில் பொககபெலாச கிராமத்திலிருக்கின்றன.

I.—பிரதமபடத்து இலக்கம் 6,723.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம், வ. று. ப. |
|---|---|---|
| 1 | இகலவவ .. | .. 6 0 23 |

எல்லை: வடக்கு-வ. எம். எம். மொகிதீன் சதக்குக்குரியதும் 4,814 ம இலக்கப் பிரதமபடத்தின் 1 ம இலக்கத் துண்டாகும பொககாபெலசகேன்யாய எனச்சொல்லப்படுவதுமான காணி ; கிழக்கு-உவை. டிங்கிரி பண்டாவும மறுவும் உருத்தாடும இகலததுப் பொத்தகும்புறவும், உவை, புஞ்சி பண்டாவும் மறுவும உருத்தாடும் நவகதகும்புறவும, வெல்சிங்கர் அவர்கள உருத்தாடும வவகர்வாகும்புறவும, உவை. அப்புகாமி உருத்தாடும வவகாவாகும்புற, உவை. அப்புகாமி உருத்தாடும் வவகாவவத்தவும ; தெற்கு-உவை. அப்புகாமி உருத்தாடும் வவகாவாவத்தவும ; மேற்கு-வ. எம். எம். மொகிதீன் சதக்குக்குரியதும 4,814 ம இலக்கப் பிரதமபடத்தின் 1 இலக்கத் துண்டாகும் பொககபெலெசகேன்யாய எனச் சொல்லப்படுவதுமான காணி.

II,—பிரதமபடத்து இலக்கம் 6,723.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம், வ. று. ப. |
|---|---|---|
| 2 | கனேவாவ .. | .. 1 3 22 |
| 3 | டியம்பலமடேகல (குளக்கட்டோரத்தில் சேமித்துவைக்கப்பட்டுள்ளது) | .. 0 0 38 |
| | மொத்தம் .. | 2 0 20 |

எல்லை: வடக்குங் கிழக்கும்-வ. எம். எம். மொகிதீன் சதக்குக்குரியதும 4,814 ம இலக்கப் பிரதமபடத்தின் 1 ம் இலக்கத் துண்டாகும பொககபெலெசகேன்யாய எனச் செல்லப்படுவதுமான காணி; தெற்கு-உவை. கேறத்காமி உருத்தாடும கனேதலுபொத்தேகாலவும, உவை, உககு பண்டாவும மறுவும உருத்தாடும் டியம்பலாமடேகலவும் ; மேற்கு-உவை. உக்கு பண்டாவும் மறுவும் உருத்தாடும் டியமபலமடேகலவும, உவை. உக்கு பண்டாவும் மறுவும் உருத்தாடும அமுனேகாலவும, டிங்கிரிபண்டா உருத்தாடும இகலததுப் பொத்தவும்.

---

[அறிவித்தல் இலககம் 10,901, புத்தளம்.]

**1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம், 1927 ம் ஆண்டுகளின் வெண்நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.**

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணிகளிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1931 ம் வூல (ஜூன்) ஆனிமீ 5 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே புத்தளம் கச்சேரியில் புத்தளம் சிலாபம் டிஸ்திறிககுகளின் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அதிலே யாதும் ஒன்றுக்கு உடந்தைககு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி சொல்லப்பட்ட வடமேல் மாகாணம் புத்தளம் சிலாபம் டிஸ்திறிககுகளின் உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு 1897 ம் ஆண்டின் 1 ம் இலககச் சட்டத்தினுல் கொடுக்கப்பட்டிருககும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறிதத காணிகள் முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

வே. குமாரசுவாமி,
அரசாட்சி உதவி ஏசன்று.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய மறு விபரங்கள் புத்தளம் உதவி ஏசென்டரிடத்திலும் படங்கள் அளவைக கந்தோர் தலைவரிடத்திலும் பெற்றுககொள்ளலாம்.

(b) இக்காணிகளுககுள்ள வழியுரித்து காணி அல்லது காணிகளுக்குள்ள உரித்தாமென அறிந்துகொள்க.

காணிகளின் விபரம்.

வடமேல் மாகாணம், புத்தளம் டிஸ்திறிக்கு புததளம் பறறுப்பகுதி ராசகுமார வன்னிப்பற்றில் கரசிக்குளம் என்னுங் கிராமத்திலுள்ள பின்வருங் காணிகள்.

பிரதமப்படம் இல. 7,197.

| காணி இல. | காணியின் பெயர். | விசாலம். வ. று. ப. |
|---|---|---|
| 5 | பழுகாயாய .. | .. 2 2 28 |
| 6 | ஷை .. | .. 0 0 11 |
| 7 | ஷை .. | 0 1 35 |
| 8 | ஷை .. | .. 0 2 9 |
| 9 | ஷை .. | .. 0 0 9 |
| | | 3 3 12 |

மேற்படி காணிகளுக் கூடாகபோகும் கன்சபாவ ரேட்டு புறநீங்கலாக, எல்லைகளாவன:

வடக்கு-முடிக்குரிய பழகாகேனவத்தையும் (வ. என். தாவிதுநயிந்தகூட்டி அடைத்த காணி பி. ப. 7,197 ல் 2 ம் துண்டு) முடிக்குரிய கனுக்கெற்றியும் (மிசிஸ். என், குணவர்தன கூட்டியடைத்த காணியும பி. ப. 7,197 ல் 3 ம் துண்டு); கிழக்கு-முடிக்குரிய கனுக்கெற்றியாவும் மிசிஸ். என். குணவர்தன கூட்டியடைத்த காணியும பி. ப. 7,197 ல் 4 ம துண்டு) மிசிஸ். குணவர்தனவும் மறுபேரும் உருத்துச் சொல்லும கனுக்கெற்றியாவும எம். வ. ஆராச்சி நைதே உருத்துச் சொல்லும மயில்ப்பிறதியாகும்புறவும்; தெறகில் 143,663 ம இலக்க றயிற்றிற பிளானில் கூறப்படும சீ. மு. உடையகாணி; மேற்கு-மாரசிங்க ஆராச்சிகே மூதலியும மறுபேருக்குமுடைய அரிக்குளமகெலேயும (றயிற்றிற பிளான் 277,096), அன்குனவிலவிலிருந்து பரணன்கட்டுவ்வுக்குப்பேகும கன்சபவ ரேட்டும்.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

புத்தளம் டிஸ்திறிக்கைச்சேர்ந்த நாச்சிக்களியிலுள்ள உப்பளத்திலிருக்கும் 8 உப்புக காவறகாருடைய வீடுகளும் 2 கங்காணிமாருடைய வீடுகளும் ஒரு உப்பு முதற் பேருடைய வீடும் உப்புத்துரையுடைய கமான் வங்களாவையும் பழுதுபார்க்கும் வேலை ஒப்பந்தத்திற கொடுக்கப் படும்.

2. இவ்வொப்பந்தத்தைக் கேட்கிரவர்கள் தங்கள் கேள்விப்பத்திரத்தை உறைகளிலிட்டு முத்திரை குத்தி அவ்வுறையின் மேல் "நாச்சிக்களி உப்பளத்திலுள்ள வீடுகளைப் பழுது பார்க்கும் ஒப்பந்தக் கேள்விப்பத்திரம்" என்று எழுதி புத்தளம் உதவி அரசாட்சி ஏசன்றுத்துரையவர்களுக்கு 1931 ம் ஆண்டு ஆனிமீ 10 ந் திகதி 1 மணிக்கு முந்திக் கிடைக்கத் தக்கதாக அனுப்ப வேண்டியது.

3. கேள்விக்காரன் கச்சேரியில் முற்பணமாகப் இருபது ரூபாய் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைத் தனது கேள்விப்பத்திரத்தோடணைக்க வேண்டும்.

4. கேள்விக்காரன் ஒப்பந்தப் பத்திரத்தை நிறைவேற்றும் வரைக்கும் இவ்விருபது ரூபாய் உதவி ஏசன்றுத துரையவர்களால் பிணையாக வைத்திருக்கப்படும். இக் கேள்விப்பத்திரம் ஏறகப்பட்டால் அன்று துவக்கம் ஞாயமான காலத்துள தான் வேலையைக் கிரமமாக முடிப்பதாய் ஓர் உடன்படிக்கை பண்ணிக்கொள்ளாவிட்டால் கட்டிய முற்பணம் பறிமுதலாக்கப்படும்.

5. கேள்விக்காரன் தனக்குக் காகிதங்கள் கிடைக்கத் தக்கதாக புத்தளத்தில் ஓர் விலாசத்தை யறிவிக்க வேண்டும்.

6. உடன்படிக்கை பண்ணிய 2 மாசத்துக்குள் வேலையை முடித்துக்கொடுக்க வேண்டும்.

7. இன்னும் வேண்டிய விபரங்களைப் புத்தளம் உப்புத் துரையவர்களிடம் அல்லது புத்தளங் கச்சேரியில் பெற்றுக் கொள்ளவும்.

8. கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதி யொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோந்த வருமானக் காரியத தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப் பிரதியைப் புத்தளம் உதவி ஏசன்றுத் துரையவர்களுக்கும் அனுப்பும் சமயம் கேள்விக்காரன் தவால் மூலமாய் அனுப்பவேண்டும்.

க. ஆள்வாப்பிள்ளை,
உதவி அரசாட்சி ஏசன்றுக்காக.

புத்தளம் கச்சேரி,
1931 ம் ஆண்டு வைகாசிமீ 26 உ.

---

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.